DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

ST.C. No. 163 of 2019

Prosecution witness : LW- 1 / PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ராஜு | Caste | : | |
| Father's Name | : | கோவிந்தன் | Calling | : | |
| Village | : | ஊத்துக்கோட்டை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 48 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் காலை 12.15</u>

1. 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். டிரைவராக வேலை செய்து வருகின்றேன்.

2. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஊத்துக்கோட்டை அண்ணா சிலை அருகே வைத்து மாலை வேளையில் எனது அம்மாவின் மீது ஒரு நபர் பைக்கில் மோதிவிட்டடதாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவம் இடம் சென்று பார்த்தபோது பைக் ஏதும் இல்லை. விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

3. நடந்த சம்பவத்திற்கு நான் ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள ராஜு என்ற கையொப்பம் என்னுடையது தான். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. புகார் மனுவில் உள்ள ராஜு என்ற கையொப்பம் அசாஆ1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

4. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

5. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது கடந்த 03.02.2019ம் தேதி மாலை 16.20 மணிக்கு ஜேபி மெடிக்கல் ஷாப் அருகே வைத்து ஆஜர் எதிரி டிவிஎஸ், எக்ஸல் மோட்டார் சைக்களை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து சாட்சி மாரியம்மாள் மீது மோதியதாக புகார் மனு அளித்துவிட்டு அதே விவரத்தை போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 12.20**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

ST.C. No. 163 of 2019

Prosecution witness : LW- 2 / PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மாரியம்மாள் | Caste | : | |
| Husband Name | : | கோவிந்தன் | Calling | : | |
| Village | : | ஊத்துக்கோட்டை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 60 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் காலை 12.20</u>

1. இவ்வழக்கில் புகார் மனு அளித்த அசா1 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரீயை எனக்கு தெரியாது.

2. எனக்கு எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்ற விவரம் தெரியாது. ஊத்துக்கோட்டை திருவள்ளுர் ரோட்டில் நான் சென்றுக்கொண்டிருந்தபோது ஏதோ வாகனம் என்மீது மோதியது அந்த வாகனம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

3. அந்த விபத்தில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

4. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

5. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது கடந்த 03.02.2019ம் தேதி மாலை 16.20 மணிக்கு ஜேபி மெடிக்கல் ஷாப் அருகே வைத்து ஆஜர் எதிரி டிவிஎஸ், எக்ஸல் மோட்டார் சைக்களை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஒட்டி வந்து தன் மீது மோதிய விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 12.25

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No. 21 of 2021

Prosecution witness : LW- 3 / PW - 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சரீதா | Caste | : | |
| Husband Name | : | முனிரத்தினம் | Calling | : | |
| Village | : | மாம்பட்டு | Religion | : | |
| Taluk | : | | Age | : | 36 |

( Accused Called absent petition filed and allowed)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

முதல் விசாரணை நேரம் காலை 12.35

1. அசா1 எனது கணவர். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 17.12.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் எர்ணாகுப்பம் முதல் மாம்பட்டுக்கு செல்லும் சாலை வரை அசா1ன் வழிமறித்து கெட்டவார்த்தைகளால் தாக்கி காயம் பட்ட விவரத்தை கேள்விப்பட்டீர்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை இந்தவழக்கிலிருந்து காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 12.40**

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No. 21 of 2021

Prosecution witness : LW- 4 / PW - 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் | Caste | : | |
| Father's Name | : | பலராமன் | Calling | : | |
| Village | : | மாம்பட்டு | Religion | : | |
| Taluk | : | | Age | : | 40 |

( Accused Called absent petition filed and allowed)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

முதல் விசாரணை நேரம் காலை 12.40

1. அசா1 எனது பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 17.12.2017ம் தேதி மாலை 6.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் எர்ணாகுப்பம் முதல் மாம்பட்டுக்கு செல்லும் சாலை வரை அசா1ன் வழிமறித்து கெட்டவார்த்தைகளால் தாக்கி காயம் பட்டதை நேரில் பார்த்தீர்களா என்றால் இல்லை. தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களை இந்தவழக்கிலிருந்து காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 12.45**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.10 of 2018

Prosecution witness : LW- 6 / PW - 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ் | Caste | : | |
| Father's Name | : | பாபு | Calling | : | |
| Village | : | பெரியபாளையம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 41 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் காலை 12.45</u>

1. ஏதும் படிக்கவில்லை செக்கியூரிட்டி வேலை செய்கின்றேன்.

2. அசா1 யை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 16.04.2016ம் தேதி இரவு 11.30 மணிக்கு வழக்கின் எதிரி அசா1 கன்னத்தில் அடித்து கொலை செய்துவிடுவதாக மிரட்டிய விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. எதிரி எனது ஊர்காரர் என்பதால் அவரை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 12.50

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.32 of 2023

Prosecution witness : LW- 1 / PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கொள்ளாபுரி | Caste | : | |
| Father's Name | : | ஏழுமலை | Calling | : | |
| Village | : | பெரியபாளையம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 69 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் காலை 12.50</u>

1. 10ம் வகுப்பு வரைபடித்துள்ளேன். கோர்ட்டில் வேலை செய்து தற்போது பணிஓய்வு பெற்றுவிட்டேன்.

2. ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 04.10.2021ம் தேதி மதியம் 1.00 மணிக்கு பெரியபாளையம் பஜாரில் வைத்து ஆஜர் எதிரி எனது மகனை அடித்து உதைத்து கீழே தள்ளினார் சம்பவத்தை கேள்விப்பட்டு நானும் எனது மகன் செங்கதிர்வேலு சம்பவ இடத்திற்கு சென்றோம். நாங்கள் ஆஜர் எதிரியிடம் ஏன் இவ்வாறு செய்தாய் என்று கேட்டதற்கு தகாதவார்த்தைகளால் பேசினார்.

3. நடந்த சம்பவத்திற்கு பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் காவல் நிலையத்தில் கொடுத்தது தான் புகார் மனு அசாஆ1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை

**<u>எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. நிறைய பேர் இருந்தார்கள் பெயர் எனக்கு தெரியாது.

2. சம்பவம் நடந்த அன்றே நான் காவல்நிலையத்தில் புகார் மனு அளித்தேன்.

3. ஆஜர் எதிரி என்னுடைய சொந்த மச்சான் மகன் என்றால் சரிதான்.

4. அவர்களுக்குள் என்ன பிரச்சனை இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. காவல்நிலையத்தில் நான் கொடுத்த புகாரில் எதிரி எனது மகனை என்ன வார்த்தைகளால் அசிங்கமாக பேசினார் என்று நான் குறிப்பிட்டு ஏதும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. சம்பவம் நடந்த போது நான் மருத்துவமனைக்கு சென்று இன்னுடைய மகனிடம் கேட்டுவிட்டு அதற்கு பிறகு தான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன்.

7. என்னுடைய மகனிடம் காவல் துறையினர் மருத்துவமனைக்கு சென்று வாக்கு மூலம் ஏதாவது வாங்கினாரா என்று சொன்னால் என்னுடைய மகனுக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது.

8. பெரியபாளையம் பஜாரில் ஆட்டோ நிறுத்தும் இடத்தில் எலக்டிரிக் கடை அருகே சம்பவம் நடைபெற்றது. கீழே 4 படிகளில் இருந்து கீழ்ே விழுந்ததால் தான் மேற்கண்ட காயம் ஏற்பட்டிருக்கும் என்று சொன்னால் எதிரி அடித்து உதைத்தால்தான் அவர் போய் படியில் விழுந்தார்.

9. நான் கூறுவது போல் எதிரி அடிக்கவில்லை அதனால் காயம் ஏதும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. குடும்ப பகை காரணமாக எதிரி மீது பொய்யான புகார் அளித்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம்1.00

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.32 of 2023

Prosecution witness : LW- 2 / PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Caste | : | |
| Father's Name | : | கொள்ளாபுரி | Calling | : | |
| Village | : | பெரியபாளையம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 40 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மதியம் 1.00</u>

1. 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆட்டோ ஓட்டி வருகின்றேன்.

2. அசா1 எனது அப்பா ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 04.10.2021ம் தேதி மதியம் 12.00 மணிக்கு மேல் ஆட்டோ ஸ்டாண்டில் வைத்து ஆஜர் எதிரி அடிக்கடி பிரச்சனை செய்துவருவதாகவும் அன்றும் அவர் அசிங்கமாக பேசியதால் நான் அதைப்பற்றி கேட்டேன் அதனால் இருவருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

3. பின்பு ஆஜர் எதிரி எனது மார்பின் மீது எட்டி உதைத்தார் அவர் உதைத்ததில் நான் அங்கிருந்த படிகள் மீது விழுந்தேன் எனது கால் மடங்கிவிட்டது. நான்

வலிஇருக்கவும் சத்தம் போட்டேன்.

4. சம்பவத்தை பார்த்தவர்கள் என்னை அருகில் இருந்து பிரபாகரன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார்கள்.

5. அங்கிருந்து எனக்கு சீட்டு ஒன்று கொடுத்தார்கள் அந்த சீட்டை பெற்று திருவள்ளுர் மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை</u>

1. போலீசார் என்னை நேரடியாக விசாரணை செய்தார்கள். போலீசார் காலையிலேயே வந்து பார்த்தார்கள்.

2. போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. மேற்படி சம்பவம் குறித்து எனது தந்தைக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

3. சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக கூறினார்.

4. இவ்வழக்கு சம்பவமாக போலீசார் எந்த தேதியில் விசாரணை செய்தார்களா என்றால் 04.10.2021 அன்றைய தினமே மருத்துவமனையில் விசாரணை செய்தார்கள்.

5. நேரடியாக என்னை விசாரிக்கவில்லை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அந்த மருத்துவமனையில் வைத்து 04.10.2021 அன்று தான் விசாரணை செய்தார்கள்.

6. அதற்கு பிறகு நேரடியாக என்னை விசாரணை செய்யவில்லை. நான் போலீசார் அளித்த வாக்குமூலத்தில் என்ன வார்த்தையால் திட்டினார் என்று வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் எதிரி எட்டி உதைக்கும்போது தேவிடியா பையா சாவுடா என்று திட்டினார்.

7. தற்போது சொன்ன விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் மேற்படி விவரம் எனது அப்பாவிற்கு தெரியாது.

8. போலீசார் விசாரணையின்போது மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

9. மேற்படி சம்பவம் மாடிபடியில் நடந்ததா என்றால் அது படிமாரி உள்ள இடத்தில் நடந்தது எத்தனை படிகள் இருக்கும் என்றால் 10 படிகள் இருக்கும்.

10. நான் ஏற்கனவே வாக்கமூலத்தில் கால் இடறி தான் கீழே விழுந்தேன் என்று சொன்னாலும் எதிரி உதைத்து தான் எட்டிஉதைத்தார் என்று சொன்னால் சரியல்ல. நானே கீழே விழுந்து எதற்காக 3 ராடு வைக்கவேண்டும்.

11. ஆட்டோ ஸ்டாண்டில் உள்ள முன்விரோதத்தின் காரணமாக நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 1.20**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.32 of 2023

Prosecution witness : LW- 3 / PW - 3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கொளதம் | Caste | : | |
| Father's Name | : | வேலுமயில் | Calling | : | |
| Village | : | பெரியபாளையம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 34 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மதியம் 1.20</u>

1. நான் இளங்கலை பட்டம் படித்துள்ளேன். சினிமாத்துறையில் உதவி இயக்குனராக பணிசெய்து வருகின்றேன்.

2. அசா1 எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

3. சுமார் 6 மாதங்களுக்கு முன்னால் மதியம் வேளையில் பெரியபாளையம் பேருந்து நிலையம் எதிரில் வைத்து சண்டை நடந்திருந்தது அங்கே நிறைய பேர் கூடியிருந்தனர்.

4. மேலும், போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் சண்டை யாருக்கெல்லாம் நடைபெற்றது என்றால் ஆட்டோ ஸ்டாண்டில் நிறையபேர்கள் இருந்தார்கள்.

**எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 1.25**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.35 of 2022

Prosecution witness : LW- / PW -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அந்தோணி ஸ்டாலின் | Caste | : | |
| Father's Name | : | | Calling | : | காவல் ஆய்வாளர் திருவள்ளூர் டவுன் |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மதியம்2.55</u>

1. நான் தற்போது திருவள்ளுர் நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் மணவாளநகர் சரக வட்ட காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது மப்பேடு காவல் நிலைய குற்ற எண் 51/2022 U/sec 454, 380 வழக்கின் எதிரி 1 அப்பு என்கின்ற அரவாபாபு எதிரி 2 நாகராஜ், எதிரி 3 பாபு, எதிரி 4 ரஞ்சித் என்கின்ற ரஞ்சித்குமார், எதிரி 5 பவன், ஆகியோர்களை 27.03.2022ம் தேதி காலை 10.30 மப்பேடு முதல் சுங்குவார்சத்திரம் சாலை புதுப்பட்டு கிராம பஸ் நிறுத்தம் அருகே மேற்கண்ட 5 நபர்களும் மறைந்து நின்றுக்கொண்டிருந்தவர்களை நான் என் பார்ட்டி சகிதம் அவர்களை மடக்கி பிடித்து. விசாரிக்க முன்னுக்கு பின்னுக்கும் முரணாக கூறினார்கள்.

2. அவர்களை தீர விசாரிக்க அப்பு என்கின்ற அரவாபாபு கையில் வைத்திருந்த பையை சோதனை செய்தபோது பலதரப்பட்ட நகைகள் காணப்பட்டது.

3. இதுகுறித்து எதிரியிடம் விசாரித்ததில் தானும் தனது கூட்டாளிகளும் திருபந்தியூர் பூங்கா நகர் பழைய திருப்பாச்சூர் அக்கரம்பாக்கம் குருவராஜூலுகண்டிகை ஆகிய ஊர்கரில் திருடிய நகைகள் என்றும் இதனை சென்னைக்கு கொண்டு சென்று விற்று பணமாக்கவேண்டி செல்வதாக கூறியதால் A1 to A5 எதிரிகளை காலை 11.00 மணிக்கு கைது செய்தும் கைதுக்கான காரணத்தை

எதிரியிடம் எடுத்துக்கூறியும் பின்னர் A1 எதிரி அரவாபாபு த-பெ தனபால் என்பவரிடம் சாட்சிகள் 1 மணிகண்டன் வயது 25 த-பெ முருகேசன் கே கே நகர் மப்பேடு திருவள்ளுர் மாவட்டம், சாட்சி2 மரியகுருசாமி வயது 23 த-பெ ஆனந்த்ராஜ் பாத்திமா கோயில் தெரு பாத்திமாபுரம் கீளச்சேரி திருவள்ளுர் மாவட்டம், ஆகியோர் முன்னிலையில் அந்தோணி ஸ்டாலின் மணவாள நகர் வட்ட காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் A1 எதிரி அரவாபாபு காலை 11.30 மணிமுதல் 13.00 மணிவரை தானே முன்வந்து எந்த வற்ப்புறுத்தலும் ஆசை வார்த்தை கூறாமல் மனித உரிமை மீறாமலும் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவுசெய்தேன். அந்த ஒப்புதல் வாக்கு மூலத்தில் எதிரி 02.03.2022-ம் தேதி நள்ளிரவு ஊத்துக்கோட்டை அடுத்துள்ள புதுக்குப்பம் என்ற கிராமத்தில் -------- பாபு ரஞ்சித் ஆகியோர்கள் ஒன்று சேர்ந்து பூட்டிகிடந்த ஒரு வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்று பீரோவில் இருந்த ஒரு பெரிய செயின் ஆரம், நெக்ளஸ், சாதா செயின், பிரேஸ்லட் , மோதிரங்கள் கம்மல்கள் மற்றும் உதிரி தங்க நகைகளை மற்றும் தாலியில் கோர்க்கும்

பொருட்களை கொள்ளை அடித்துக்கொண்டு தப்பித்து சென்று---- என்று கூறினார் ------மேலும் எதிரி என்னை தாங்கள் அழைத்து சென்றால் -------- மற்றும் எனது நண்பர்கள் கூட்டாக சேர்ந்து திருடியதை குறித்தும் சில நகைகளை விற்று பணமாக்கியது குறித்தும் மீதி நகைகளை சென்னைக்கு எடுத்துச்சென்றதை பற்றியும் ----- ஒப்புதல் வாக்குமூலம் அளித்தேன். என்னை தாங்கள் மேலே சொன்ன ஊர்களுக்கு அழைத்து சென்றால் திருடிய நகைகளை அடகு வைத்திருக்கும் கடைகளை அடையாளம் காட்டுவோம் நான் திருடிய வீடுகளை காட்டுவோம் என்று கூறினார்.

4. பின்பு எதிரியிடமிருந்து 27.03.2022ம தேதி பகல் 11.30 மணிக்கு சுமார் 224 கிராம் எடைகொண்ட உருக்கிய தங்க கட்டி ஒன்றை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து சாட்சிகள் மணிகண்டன், மற்றும் மரிய குருசாமி முன்னிலையில் கைப்பற்றினேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ8 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. கைது செய்த எதிரிகளை நிலையம் கொண்டு வந்து நிலைய ஆவணங்களில் பதிவுசெய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்றம் அனுப்பிவைத்தேன்.

5. கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 95 மூலமாக நீதிமன்றம் அனுப்பிவைத்தேன். படிவம் 95 ஆனது அசாஆ9 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

6. 224 கிராம் எடைகொண்ட உருக்கிய தங்க கட்டி சாபொஆ1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

<u>எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை</u>

1. ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தில் பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கமூலத்தில் பதிவு செய்து அதன் அடிப்டையில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரிதான்.

3. ஊத்துக்கோட்டை வழக்கிற்கும் இந்த எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் அது அந்த வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்கு தான் தெரியும்.

**மறுவிசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மதியம் 3.20**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.56 of 2016

Prosecution witness : LW- 10 / PW - 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மருத்துவர் பத்மினிபிரியதர்ஷினி | Caste | : | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Father's Name | : | | Calling | : | ESI மருத்துவமனை மணலி |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மதியம்3.40</u>

1. நான் தற்போது ESI மருத்துவமனையில் மருத்துவராக பணிசெய்து வருகின்றேன். கடந்த 17.03.2015 மதியம் 12.25 மணிக்கு திருவள்ளூர் அரசு மருத்துவமனை மருத்துவராக பணிசெய்துக்கொண்டிருந்தபோது திருமதி.சத்யா 29 வயதுள்ள பெண் கயடை கிராமத்தை சேர்ந்தவர்கள் அவர்களுடைய மாமா பிராங்ளின் அவர்களுடன் மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை 10 தெரிந்தநபர் 17.03.2015 மணி காலை 5.00 மணிக்கு கையால் தாக்கியதாக கூறினார் அவரை பரிசோதனை செய்து பார்த்தபோது இடது புறம் கன்னத்தில் வீக்கம் இருந்தது. தலை பின்பக்கம் தொடு வலி இருந்தது மேல் உதடு பக்கம் சிறு காயம் இருந்தது மற்றும் இடது காதில் தொடு வலி இருந்தது.

2. நான் உள்நோயாளி சிகிச்சைக்கு சேர்த்தேன். அவர்களுக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சாதாராண காயம் என்று நான் சான்று வழங்கினேன். மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேடு விபத்து பதிவேடு எண்.12321 அசாஆ7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேல் சிகிச்சைக்ககா காயம்முற்ற நபரை ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிடி ஸ்கேன் எடுப்பதற்காகவும் பரிந்துரைசெய்யப்பட்டது.

3. மேற்படி சிடி ஸ்கேன் அறிக்கையின் காயமுற்ற நபருக்கு எலும்பு முறிவு எதுவும் ஏற்பட்டதாக இல்லை என்பது அறிக்கையின் மூலம் எனக்கு தெரியவந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>**எதிரிதரப்பின் குறுக்கு விசாரணை**</u>

1. தாக்கியநபர்கள் குறித்த விவரங்கள் எதாவது குறிப்பிட்டுசொன்னாரா என்றால் இல்லை.

2. காயமுற்ற நபர் என்றைய தினத்தில் அவர் மருத்துவமனையில் விடுவிக்கப்பட்டார் மற்றும் காயமுற்ற நபருக்கு எந்த வகையான சிகிச்சை அளிக்கப்பட்டது என்ற மருத்துவ ஆவணத்தை போலீசாரிடம் ஒப்படைத்தீர்களா

என்றால் ஒப்படைத்தேன்.

3. போலீசார் விசாரணையின்போது ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பிய பரிந்துரை கடிதம் மற்றும் மருத்துவமனையிலிருந்து விடுவித்த ஆவணம் போலீசார் விசாரணையில் கொடுத்தீர்களா என்றால் கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் ஆவணங்கள் உள்ளது.

4. மேற்படி காயம் எப்போது ஏற்பட்டது என்பது குறித்து தனியாக அறிக்கை எதுவும் கொடுத்துள்ளீரா என்றால் இல்லை நான் விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ளேன்.

5. மேல்சிகிச்சைக்காக அனுப்பபடவில்லை என்றாலும் அவர் சிடி ஸ்கேன் எடுக்கவும் மட்டுமே அனுப்பப்பட்டது என்று சொன்னால் அவரின் இடது கன்னத்தில் வீக்கம் இருந்ததால் பரிந்துரை செய்யப்பட்டது அதுவே மேல் சிகிச்சைக்கான கடிதமாகும்.

6. காயமுற்ற நபர் தண்ணீர் குடம் தூக்கிசெல்லும்போது தடுக்கிவிழுந்தாலும் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை.

**மறுவிசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 4.00**

Prosecution witness : LW- 3 / PW -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மகாலிங்கம் | Caste | : | |
| Father's Name | : | பழனி | Calling | : | |
| Village | : | ஆலப்பாக்கம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 50 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

முதல் விசாரணை நேரம் மாலை 4.10

1. நான் கூலி வேலை செய்துவருகின்றேன். 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா.1 எனது தகப்பனார்.

2. ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள். இவ்வழக்குசம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 14.10.2019ம் ஆண்டு மதியம் 10.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் கெட்டவார்த்தைகளால் பேசி நிலஅளவை செய்யவிடாமல் தடுத்து மிரட்டிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற பொய்சாட்சியம்அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 4.15**

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.25 of 2020

Prosecution witness : LW- 4 / PW -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லோகம்மாள் | Caste | : | |
| Husband Name | : | சோக்கு | Calling | : | |
| Village | : | ஆலப்பாக்கம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 45 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மாலை 4.15</u>

1. நான் 100 நாள் வேலை செய்துவருகின்றேன். 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா.1 எனது மாமனார்.

2. ஆஜா் எதிரிகள் எனக்கு தெரியாது. இவ்வழக்குசம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 14.10.2019ம் ஆண்டு மதியம் 10.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் கெட்டவார்த்தைகளால் பேசி நிலஅளவை செய்யவிடாமல் தடுத்து மிரட்டிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற பொய்சாட்சியம்அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 4.15**

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.25 of 2020

Prosecution witness : LW- 5 / PW - 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பூமணி | Caste | : | |
| Husband Name | : | செல்வம் | Calling | : | |
| Village | : | ஆலப்பாக்கம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 52 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மாலை 4.20</u>

1. நான் 100 நாள் வேலை செய்துவருகின்றேன். 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா.1 எனக்கு தெரியும்.

2. ஆஜர் எதிரிகள் எனக்கு தெரியும் எனது ஊர்க்காரர்கள். இவ்வழக்குசம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 14.10.2019ம் ஆண்டு மதியம் 10.00 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகள் கெட்டவார்த்தைகளால் பேசி நிலஅளவை செய்யவிடாமல் தடுத்து மிரட்டிய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களை காப்பாற்ற பொய்சாட்சியம்அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 4.15**

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

C.C. No.25 of 2020

Prosecution witness : LW- / PW -

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஏழுமலை | Caste | : | |
| Father's Name | : | ஜெயராமன் | Calling | : | |
| Village | : | ஆலப்பாக்கம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 45 |

( Accused Called Present )

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2023

<u>முதல் விசாரணை நேரம் மாலை 4.20</u>

1. நான் விவசாயம் செய்துவருகின்றேன். 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அசா.1 எனக்கு தெரியும்.

2. சுமார் 1 ஆண்டுக்கு முன்னர் நானும் குமரேசனும் கோயிலில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது போலீசார் வந்து என்னிடம் சாட்சிக்கு கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதிய விவரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அசாஆ2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

3. அரசு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பெயரில் அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

4. கடந்த 22.10.2019ம் தேதி காலை 7.00 மணிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் சம்பவஇடத்யையும் சுற்று புறத்தையும் பார்வையிட்ட அவர்கள் தயார்செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இல்லை**

**சாட்சியம் முடிவுற்ற நேரம் மாலை 4.20**